**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**
**CASE NO.SC. 138 /2021**

**Deposition of P.W.** 6

Name : மேரி அனிதா

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated:24.09.2025**

**Accused** absent. Petition filed and allowed.

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது நாகர்கோவில் பொருளாதார குற்ற பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் திருவட்டார் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றிய போது 27.03.2018ம் தேதி காலை 09.00 மணிக்கு லாசர் மகன் செல்லத்துரை என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று அதன் தன்மை படி நிலைய குற்ற எண். 67/2018 பிரிவுகள் 294(பி), 332, 323, 307 506(2) இ.த.ச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் அந்த முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ.3. அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி விட்டு ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல்ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிதரப்பு குறுக்கு விசாரணை</u>**

26.03.2018ம் தேதி மாலை 05.30 மணிக்கு சம்பவம் நடைபெற்றதாகவும், அதற்கு 27.03.2018ம் தேதி காலை 09.00 மணிக்கு புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். புகார் கொடுப்பதில்ஏற்பட்ட காலதாமதம் குறித்து குறிப்பிட்டுள்ளேனா என்றால் காரணம் எதையும் குறிப்பிடவில்லை. மேலாளர் அறிவுரை படி இன்று 27.03.2018ம் தேதி புகார் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 27.03.2018ம் தேதி காலை 10.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பபட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் குறித்தும் எதிரி குறித்தும், சாட்சிகளை குறித்தும், மேலதிகாரிகளின் அறிவுரை படி அபிவிருத்தி செய்யப்பட்டு காலதாமத்துடன் கூடிய பொய்யான புகாரை பெற்று அதன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.